# அரசகாணியில் காணப்படும் பிணக்குகளைத் தவிர்ப்போம்!

## அரச காணிகளில் பிணக்குகள் தோன்ற காரணங்கள்

- சட்ட ரீதியற்ற ஆவணங்களினூடான காணிப் பரிமாற்றம்
- காணியின் தொடர் ஆட்சியை கைவிடல்
- காணி அபிவிருத்தியற்று காணப்படல்.

## அரச காணிகளுக்கான சட்ட ரீதியான ஆவணங்கள்

- காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 (2) இன் கீழ் வழங்கப்படும் பிரதேசசெயலாளரினால் ஒப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரம்.



- காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 (4) இன் கீழ் ஜனாபதியினால் ஒப்பமிடப்பட்டு வழங்கப்படும் அளிப்பு.



## அரச காணிகளுக்கான சட்டரீதியற்ற ஆவணங்கள் யாவை?

- பிரதேசசெயலாளரின் அனுமதியின்றி வரையப்படும் நொத்தாரிசு உறுதிகள்
- விற்பனை உடன்படிக்கைகள்
- அரச காணிக்கான வெளிப்படுத்தல் உறுதிகள்.
- அரச அதிகாரிகளால் வழங்கப்படும் சட்ட ரீதியற்ற கடிதங்கள்
- காணி கைமாற்றம் செய்பவர்களால் பரிமாறப்படும் கடிதங்கள்





வெளிப்படுத்தல் உறுதி





விற்பனை
உடன்படிக்கை





நன்கொடை உறுதி



கடிதங்கள்

## காணிப்பிணக்குகளை தவிர்ப்பதற்கான வழிகள்

- சட்ட ரீதியான ஆவணத்தை பிரதேசசெயலாளரிடம் கோரிப் பெறல்.
- காணியின் ஆட்சியினையும் அபிவிருத்தியினையும் தொடர்ச்சியாக மேற்கொள்ளல்.

- விசேட தேவைகளின் போது மரபுரிமையாளர்களுக்கு வெளியே காணி மாற்றம் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் அரச காணிக்கான ஆவணத்தை கொண்டிருப்பவர் முறைப்படி கடிதம் ஊடாக பிரதேசசெயலாளர் முன்னிலையில் அரசிற்கு பாரப்படுத்த வேண்டும். இதன் பின்னரே பிரதேசசெயலாளரால் சட்ட நடைமுறைகளுக்கேற்ப தொடர் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

- அரச காணிகள் காணிச் சட்ட நடைமுறைகளுக்கு முரணான விதத்தில் கைமாற்றி பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் பிணக்குகளுக்கு காணிப் பரிமாற்றத்துடன் தொடர்புடைய இரு தரப்பினருமே பொறுப்பாவர். அவர்களுக்கிடையில் பிணக்குகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் தீர்வுகளை வழங்குவது தொடர்பில்
  1) காணி தொடர்பான சட்ட ரீதியான ஆவணத்தை (அனுமதிப்பத்திரம், அளிப்பு) கொண்டிருப்பவர் தொடர்பில் சாதகமாக பரிசீலிக்கப்படும்.
  2) அதன் பின்னரே அபிவிருத்தி, ஆட்சி என்பன கருத்தில் கொள்ளப்படும்

மேற்குறித்த விடயங்களை கருத்தில் கொண்டு அரச காணி கைமாற்றல்களின் போது பிரதேச செயலாளரின் அனுமதியுடன் உரிய சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொண்டு அனாவசியமான காணிப் பிணக்குகளை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.சோதிநாதன்
மாகாண காணி ஆணையாளர்
வட மாகாணம்.